

**பயிற்சி : வளிச்சீராக்கி, குளிருட்டி திருத்துனர்.**

**கதை சொல்பவர் : மனோகரன் சஞ்ஜிதரன்**

**கதை சேகரிப்பவர் : சோ.புண்ணியமூர்த்தி ( திட்ட உத்தியோகத்தர்)**

**திகதி : 12.03.2011**

**கதை விபரணம் :**

19 வயதைக் கொண்ட மனோகரன் சஞ்ஜிதரன் ஆகிய நான் தாண்டியடி கிராமத்தில் 1992.03.06 ம் திகதி பிறந்தேன் எனது குடும்பம் 6 அங்கத்தவர்களைக் கொண்டது. இதில் 4 பெண்களும் 2 ஆண்களும் அடங்குவர்.எனது குடும்பமானது ஆரம்ப காலத்தில் தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் வீடுகள், தென்னை மரங்கள், மேட்டுநிலப்பயிர்கள் என்பவற்றுடன் வருமானம் பெறும் நிலையில் இருந்தது நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து தற்போது கடற்கரை வீதி தாண்டியடியில் வசித்து வருகின்றோம்.

எனது அப்பா கூலி வேளாண்மையும் ஏனைய கூலி வேலைகளுக்கும் செல்பவர் அவரின் வருமானம் எங்களது உணவுத் தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. இந்த வகையில் என்னால் பஸ்சில் சென்று தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் G.C.E.O/L வரை மட்டுமே கற்க முடிந்தது. மேலதிக கல்வியை தொடர முடியாத நிலையில் நான் எனது அப்பாவுடன் வயல் வேலைக்கும், விறகு வெட்டவும் சென்றேன் இவ்வேளை எனது தாயார் SWOAD அமைப்பில் ஒரு அங்கத்தவராக இருந்தார். அவர்களுக்கு கிழமை தோறும் குழுக்கூட்டம் மாதம் ஒரு முறை கிளைக்கூட்டம் நடைபெறுவது வழக்கம் அக்கூட்டத்திற்கு சென்ற எனது அம்மா அங்கு கடமை புரியும் ஊழியரால் Ref & Air Conditioning Mechanic பயிற்சி நெறியொன்று அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ளது அதற்கு உங்களது பிள்ளைகள் யாரும் இருந்தால் என்னிடம் அப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் தருமாறு கூறியதை எனது தாய் என்னிடம் வந்து கூறினார். நானும் இதனை ஏற்று எனது அம்மா,அப்பா சம்மதத்துடன் நந்தினி அக்காவிடம் (VDO) எனது விண்ணப்பத்தை வழங்கினேன்.

பின்னர் எனக்கு நேர்முகப்பரீட்சைக்கான கடிதம் கிடைத்தது இந்த Ref & Air Conditioning Mechanic நேர்முக பரீட்சைக்கு 35க்கு மேற்பட்ட மாணவர்கள் வருகை தந்திருந்தனர் அவ்வேளை எனக்கு இந்த பயிற்சி நெறியை முடிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. ஏனெனில் அவர்கள் எதிர்பார்க்கும் தகைமை என்னிடம் காணப்பட்டது. இதனடிப்படையில் நான் Ref & Air Conditioning Mechanic பயிற்சி நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டேன்.

குடும்ப நிலைமை, தான் ஒரு தொழில் செய்ய வேண்டும் போன்ற இரண்டையும் அடிப்படையாக வைத்து இப் பயிற்சி நெறியை தவறவிடாமல் சிறப்பாக மேற்கொள்வதற்கு தூண்டு கோலாக அமைந்தன.

SWOAD அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட இப் பயிற்சி நெறியானது தொழில் திறன் பயிற்சி மட்டுமன்றி தொழில் வழிகாட்டல் பயிற்சிகளும் அதாவது Career Guidance, பெற்றார் கூட்டம், சிங்கள வகுப்பு ஆங்கில வகுப்பு போன்றனவும் வழங்கப்பட்டன. இப் பயிற்சி நெறி ஊடாக எனது ஆளுமை மற்றும் தொழில் செய்யும் ஆற்றல் ஏற்பட்டது.

இப் பயிற்சி நெறியானது 9மாத கால பயிற்சியாக இருந்தது 6மாதம் பயிற்சி நிலையத்தில் கற்றல்,பின் 3மாதம் மாதங்களும் வெளிக்கள பயிற்சியில் ஒரு தொழில் தருனரின் வேலை செய்தல் அந்த வகையில் பெற்ற திறன்களை இன்னும் கூட்டுவதற்காக 3மாத OJT க்காக அக்கரைப்பற்று Hanan Ref Centre Work Shop க்கு

நியமிக்கப்பட்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் 14Km தூரம் பிரயாணம் செய்து 3 மாத கால வெளிக்களப்பயிற்சியை ODW திட்டத்தினால் வழங்கப்படும் 2000 ரூபாவையும் வைத்து திறன்பட முடித்துக் கொண்டேன்.

இதன் பின்னர் எனது ஆளுமை,திறன் மென்மேலும் அதிகரிக்கப்பட்டன மற்றும் இப் பயிற்சியை முடித்த அனைவருக்கும் TVC நிறுவனத்தின அனுசரணையுடன் பரீட்சை நாடாத்தப்பட்டு சான்றிதழ்கள் (NVQ Level 03) மற்றும் 15,000 ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இப் பயிற்சியின் ஊடாக பெற்ற திறன்கள்,அறிவினைக் கொண்டு நான் OJT முடித்த Hanan Ref Centre Work Shop ல் தற்போது வேலை செய்து வருகின்றேன் இவ்வாறு இவ் வேலைக்கு அமர்த்துவதற்கு காரணம் எனது நேர்மையான வினைத்திறனான வேலையே காரணமாக இருந்தது.

தற்போது இத் தொழிலின் மூலம் மாதம் ஒன்றுக்கு 15000ரூபா பெறுகின்றேன். இவ்வாறு பெறப்படும் பணத்தில் எனக்கு கீழ் உள்ள தங்கைமார்கள் மூவரையும் படிப்பிக்க கூடியதாகவுள்ளது. இவை தவிர ஏனைய பணத்தை வீட்டுத் தேவைக்கும் இதில் சிறு தொகையை SWOAD அமைப்பில் சேமித்தும் வருகின்றேன்.

இப் பயிற்சி நெறி முடித்த எங்களை/என்னை Tecno Blue Samsun Company உங்கள் பெயர்களை நாங்கள் SWOAD அமைப்பிலிருந்து பெற்றுகொண்டேன். நீங்கள் விரும்பினால் உங்களுக்கு AC திருத்துதல் Parts விற்றல் கடையொன்று போட வேண்டும் என்பதேயாகும்.

இறுதியாக SWOAD / ODW ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் நான் நன்றியை கூற கடமைப்பட்டுள்ளேன் ஏனெனில் சமூகம் மதிக்கத்தக்க வகையில் என்னை உருவாக்டகி குறைந்த செலவிலும்,நம்பிக்கையான ஒரு Company ஊடாக வெளிநாடு செல்வதற்கு ஏற்பாடுகள் ஏற்பாடுகள் செய்தமைக்கு நான் என்றென்றும் நன்றியுள்ளவனாகவும் கடமைப்பட்டவனாகவும் இருப்பேன்.

